Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC. 200/2025**

Preliminary Register

Deposition of **PW-2 LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வரதராஜன் | Father Name | : | உத்திராபதி |
| Village | : | பண்டிதசோழநல்லூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02nd day of March 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**<u>முதல் விசாரணை-</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்துவருகிறேன். அ.சா.1 எனது சகோதரி மகன். ஆஜர் எதிரி எனது சகோதரர். இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பாக ஆஜர் எதிரிக்கும் அசா.1க்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 13.06.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் எனது ஊரை சேர்ந்த மனோகரன் என்பவருடன் எனது தெருவில் உள்ள காலி மனையில் ரோட்டிற்கு தென்புறமாக நின்றுகொண்டிருந்தோம். அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த உள்ளாட்சி மன்ற தலைவர் சிவகுமார் என்பவர் காலவாய் தொழில் செய்வதற்காக கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார் அதற்கு இடம் போதவில்லை என்பதற்காக பிரச்சனைக்குள்ளான இடத்திலும் கொட்டகைபோட்டார். அப்போது எதிர் திசையில்

சத்தம் கேட்டது. நானும் மனோகரனும் சென்று பார்த்தோம். அப்போது நான் பார்க்கும் போது ஆஜர் எதிரி தனது இடது கையில் அருவாளை வைத்துக்கொண்டு அ.சா.1 ஐ பார்த்து ஓங்கி வீசினார் அவர் விலகிக்கொண்டதால் அவர் மேல் படவில்லை. பின்னர் ஆஜர் எதிரி காலில் உள்ள செறுப்பை கலற்றி அ.சா.1ஐ கண்ணத்தில் அறைந்தார். இந்த இடத்திற்கும் உனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை நீ ஏன் இந்த இடத்திற்கு வருகிறாய் என்று கூறி இதனை உனது கணவரிடம் கூறினால் உன்னை வெட்டி புதைத்துவிடுவேன் என்று மிரட்டினார். அ.சா.1 அந்த இடத்தை விட்டு சென்றுவிட்டார். ஆஜர் எதிரி அங்கேயே நின்றுகொண்டிருந்தார். நடந்த சம்பவத்தை பற்றி அ.சா.1 புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

அ.சா.1 எனது சம்பந்தி முறை என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 3 மனோகரன் எனது உறவினரா என்றால் இல்லை எனது ஊர்க்காரர். அ.சா.1க்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்து அது சம்பந்தமாக நான் மட்டும்தான் பேசி முடித்துவிட்டேனா என்றால் சரிதான். அ.சா.1 கூடுதலாக வட்டிக்கேட்டு மேற்படி பிரச்சனையை முடிக்காமல் நிலுவையில் வைத்திருந்தாரா என்றால் இல்லை மேற்படி பணப் பிரச்சனையை முடித்து விட்டோம். அ.சா.1க்கு காதுவலி என்று அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் நானும் செல்லவில்லை அ.சா.1ன் கணவரும் அப்போது அங்கு இல்லை. அ.சா.1 ன் கணவர் வேலையை முடித்துவிட்டு மாலைதான் வீட்டுக்கு வருவார் என்றால் இல்லை. அவர் வேலையை முடித்துவிட்டு காலை 11.00-12 .00 மணிக்குதான் வீட்டிற்கு வருவார். அ.சா.1 ஐ காவல் நிலையத்தில் விசாரிக்கும்போது அருகில் இருந்தேனா என்றால் இல்லை. அ.சா.1 ஐ போலீசார் விசாரிக்கும்போது நானும் அவரது கணவரும் அருகில் இருந்தோம் என்றாலும் நாங்கள் கூறிய சங்கதிகளைதான் போலீசார் புகாரில் எழுதிக்கொண்டார்கள் என்றாலும் சரியல்ல. நான் கூறியதைபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1

எனது சம்பந்தி என்பதால் அவர் கொடுத்த பொய்புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.02 12:42:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. STC. 200/2025**

Preliminary Register

Deposition of **PW- 3 LW - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மனோகரன் | Father Name | : | சிட்டு |
| Village | : | பண்டிதசோழநல்லூர் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02nd day of March 2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்துவருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊர்க்காரர்கள். ஆஜர் எதிரி அ.சா.1ன் சகோதரர். இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பாக ஆஜர் எதிரிக்கும் அசா.1க்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 13.06.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் நான் எனது ஊரை சேர்ந்த வரதராஜன் என்பவருடன் எனது தெருவில் உள்ள காலி மனையில் ரோட்டிற்கு தென்புறமாக நின்றுகொண்டிருந்தோம். அப்போது எங்கள் ஊரைச் சேர்ந்த உள்ளாட்சி மன்ற தலைவர் சிவகுமார் என்பவர் காலவாய் தொழில் செய்வதற்காக கொட்டகை போட்டுக்கொண்டிருந்தார் அதற்கு இடம் போதவில்லை என்பதற்காக

பிரச்சனைக்குள்ளான இடத்திலும் கொட்டகைபோட்டார். அப்போது எதிர் திசையில் சத்தம் கேட்டது. நானும் வரதராஜனும் சென்று பார்த்தோம். அப்போது நான் பார்க்கும் போது ஆஜர் எதிரி கையில் வைத்திருந்த அருவாளை கொண்டு அ.சா.1 ஐ பார்த்து ஓங்கி வீசினார் அவர் விலகிக்கொண்டதால் அவர் மேல் படவில்லை. பின்னர் ஆஜர் எதிரி காலில் உள்ள செறுப்பை கலற்றி அ.சா.1ன் கண்ணத்தில் அறைந்தார். இந்த இடத்திற்கும் உனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை நீ ஏன் இந்த இடத்திற்கு வருகிறாய் என்று கூறி மிரட்டினார். அ.சா.1 அந்த இடத்தை விட்டு சென்றுவிட்டார். ஆஜர் எதிரி அங்கேயே நின்றுகொண்டிருந்தார். நடந்த சம்பவத்தை பற்றி அ.சா.1 புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

அ.சா.1 எனது அக்கா முறை என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 2 வரதராஜன் எனது மாமா முறை என்றால் சரிதான். அ.சா.1க்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 ன் மகள் காதல் சம்பந்தமாக ஆஜர் எதிரி கண்டித்ததால் ஏற்பட்ட பிரச்சனை பற்றி எனக்கு தெரியும் என்றால் தெரியும் என்று கூறிவிட்டு சாட்சி பின்பு அதுபற்றி தெரியாது என்று மறுத்து கூறிகிறார். அ.சா.1 எனக்கு அவ்வப்போது பண உதவி செய்வார் என்றால் இல்லை. நான் கொட்டகை போடும் தொழில் செய்துவருகிறேன் என்றால் சரிதான். நான் சத்தம் கேட்ட பிறகுதான் அங்கு சென்றேன் என்றால் சரிதான். அங்கு செறுப்பு, அருவாள் சம்பவயிடத்தில் கிடந்தது என்றால் சரிதான். மேற்படி பொருட்களை நானும் வரதராஜனும் தான் எடுத்து போலீசாரிடம் கொடுத்தோம் என்றால் இல்லை. சம்பவத் தேதியிலிருந்து ஒரு வாரம் கழித்து தான் போலீசார் என்னையும் அ.சா2 ஐயும் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அ.சா.1 எனது அக்கா உறவுமுறை என்பதால் அவர் கொடுத்த பொய்புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.02 12:42:31 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.